## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(15.02.2023 முதல் 19.02.2023)

**அறிக்கைஎண்: 13/2023** **தேதி: 14.02.2023**

### கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 – 33 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 19 - 21 °செ ஆகவும் பதிவானது.

### கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (15.02.2023 முதல் 19.02.2023).

| கடந்தவாரவானிலை (10.02.2023 முதல் 13.02.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (15.02.2023 முதல் 19.02.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 10/02 | நாள்-2 11/02 | நாள்-3 12/02 | நாள்-4 13/02 | தேதி | நாள்-1 15/02 | நாள்-2 16/02 | நாள்-3 17/02 | நாள்-4 18/02 | நாள்-5 19/02 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 32 | 33 | 32 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 34 | 34 | 34 |
| 21 | 21 | 20 | 19 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 19 | 20 | 20 | 21 | 21 |
| 5 | 6 | 5 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 88-34 | 86-47 | 86-38 | 87-37 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-30 | 80-20 | 80-30 | 80-30 | 90-30 |
| 14 | 9 | 11 | 12 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 6 | 8 | 8 | 4 |
| கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

### கரூர் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் குறைந்த மேகமூட்டத்துடன் காணப்படும். 15.02.2023 முதல் 19.02.2023 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 33 – 34 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19 – 21 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 20-30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 – 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | அறுவடை | வறண்ட வானிலையை பயன்படுத்தி நெல் ஈரப்பதம் காய்ந்தவுடன் நெல் வயல்களை அறுவடை செய்யவும். |
| பயறு வகைகள் | விதைப்பு | நெல் அறுவடை செய்த தரிசு நிலங்களில் உளுந்து மற்றும் பச்சைப்பயிறு விதைக்கவும். |
| பயறு வகைகள் | விதைப்பு | ஒரு கிலோ பயறு விதைக்கு பியூவேரியானா பேசியானாவை 10 கிராம் என்ற வீதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இரவு நேரங்களில் கொட்டகைகளில் வெப்ப மூட்டிகளை பயன்படுத்தவும். |

## குறுஞ்செய்தி

வறண்ட வானிலையை பயன்படுத்தி நெல் வயல்களை அறுவடை செய்யவும்.

**இயக்குநர்**